பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 15 புதன்கிழமை 01.10.2025 | அதிர்வு 62

## இளைஞர்கள் நால்வர் கட்டுநாயக்கவில் கைது

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள், இலத்திரனியல் சிகரெட்டுகள், கிரீம் வகைகள் மற்றும் மருந்து வகைகளுடன் நான்கு இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து 05▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




## நிறைவுக்கு வந்தது உண்ணாவிரதம்

# சர்வதேச நீதி வேண்டி தீப்பந்தப் போராட்டம்!

### உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்தும் ஐ.நாவின் அறிக்கையும் தீயிட்டு எரிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்குச் சர்வதேச நீதி கோரி யாழ். செம்மணியில் நடத்தப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் இன்று நிறைவுக்கு வந்தது.

இறுதி நாளான இன்று சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் பாரிய தீப்பந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. 02▶



























## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விவகாரம் தொடர்பாக உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையும் போராட்டக்காரர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

போராட்டத்தின் இறுதி நாளான இன்று மதியம் ஒரு மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த போராட்டக்காரர்கள், தீப்பந்தங்களையும் ஏந்தியிருந்தனர்.

அதேவேளை, சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி இனப் படுகொலை செய்யப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், இலங்கையில் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழின அழிப்புக்கும் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்ததுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கையொன்றையும் அனுப்பி வைத்தனர்.





# நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பம்

(வடமராட்சி நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு - நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை காலை ஆரம்பமாகியது.

அலங்கார உற்சவத்தில் விசேட திரு விழாக்களாக எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பாம்புத் திருவிழாவும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பல் திருவிழாவும், 8 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும், 9ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும்,10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 11ஆம் திகதி சனிக்கிழமை கேணித் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறவுள்ளன.















# மன்னாரில் காற்றாலைப் போராட்டக்காரர்கள் ஐந்து பேருக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகரப் பகுதிக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மக்களின் எதிர்ப்பையும் மீறி கொண்டு வரப்பட்ட காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருள்களை மன்னார் நகருக்குள் கொண்டு வர வேண்டாம் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு இன்றைய தினம் புதன்கிழமை மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே கடந்த வெள்ளிக்கிழமை இரவு மக்கள் எதிர்ப்புப் போராட்டம் செய்த போது பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்த மூவர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர்களுக்கு எதிராக பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இதன் போது குறித்த மூவரும் சனிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் குறித்த மூவரையும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மேலும் 5 நபர்களுக்கு எதிராக மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் உள்ளடங்கலாகப் போராட்டத்தில் ஈடுபட்ட 6 நபர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில் குறித்த நபர்கள் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் ஊடாக இன்றைய தினம் புதன்கிழமை மன்றில் முன்னிலையாகினர்.

இதன் போது அவர்கள் சார்பில் மன்றில் ஏனைய சட்டத்தரணிகளும் ஆதரவை தெரிவித்தனர். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறித்த 5 சந்தேக நபர்களையும் ஒவ்வொரு சந்தேக நபர்களும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

வழக்க மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.








# நாடு திரும்பினார் ஜனாதிபதி

ஜப்பானிய அரசின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று காலை நாடு திரும்பினார்.

கடந்த 27 ஆம் திகதி ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பித்த ஜனாதிபதி, ஜப்பானின் ஒசாகா நகரில் நடைபெற்ற “எக்ஸ்போ 2025” கண்காட்சியில் இலங்கை தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நெருங்கிய நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதையும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட பல இருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஜனாதிபதி பங்கேற்றதுடன், ஜப்பானிய பிரதமர் ஷிகெரு இஷிபா, ஜப்பானிய நிதி அமைச்சர் கதோ கசுனொபு, பாதுகாப்பு அமைச்சர் டி.எம் நகடானி, நிப்பொன் மன்றத்தின் ஆரம்பத் தலைவர் யொஹெய் சசகாவா மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் டனாகா அகிஹிகோ உள்ளிட்ட அந்த நாட்டின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

மேலும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஜப்பானிய பேரரசர் நருஹிதோவை ஜப்பான் பேரரசர் மாளிகையில் சந்தித்து சுமூகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.



ஜப்பானின் முன்னணி வர்த்தகர்களுடன் வட்டமேசை கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஜனாதிபதி, ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்ற ஜப்பான் – இலங்கை வர்த்தக மன்றத்திலும் இணைந்துகொண்டதுடன், இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் தற்போது இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள முதலீட்டுக்கு உகந்த சூழல் குறித்தும் விளக்கமளித்தார்.

ஜப்பான் – இலங்கை அபிவிருத்தி ஒத்துழைப்பில் ஒரு புதிய மைல்கல்லை குறிக்கும் வகையில், பால் உற்பத்தித் துறையில் செயற்றிறனை மேம்படுத்தும் திட்டத்துக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வும் ஜனாதிபதியின் விஜயத்துடன் இணைந்த வகையில் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவுடன் இந்த விஜயத்தில், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இணைந்துகொண்டனர்.

# குளவி கொட்டி 9 தோட்டத் தொழிலாளர்கள் பாதிப்பு

மஸ்கெலியா, மவுஸ்ஸாக்கலை தோட்ட சீட்டன் பிரிவில் ஒன்பது தோட்டத் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளையில், தேயிலைச் செடியின் கீழ்ப் பகுதியில் இருந்த குளவிக் கூடு கலைந்து கொட்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட 9 பேரும் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் நால்வர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர் என்றும், ஐந்து பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் மாவட்ட வைத்தியசாலையில் உள்ள வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



## இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கல்முனை மற்றும் கொழும்பு – பொரளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் ஆவார்.

சந்தேகநபர்களான இளைஞர்கள் நால்வரும் டுபாயில் இருந்து நேற்று இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதன்போது அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

சோதனையில் சந்தேகநபர்களான இளைஞர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளில் இருந்து 58 ஆயிரத்து 400 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 292 சிகரெட்டு காட்டுன்கள், 100 இலத்திரனியல் சிகரெட்டுகள், கிரீம் வகைகள் மற்றும் மருந்து வகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமதி ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாவகச்சேரியில் இன்று முதல் தினமும் சத்திர சிகிச்சைகள்

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் சத்திர சிகிச்சைக் கூடம் இன்று புதன்கிழமை முதல் மீண்டும் தினமும் இயங்கும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையின் மயக்க மருந்து வைத்தியர் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று புதன்கிழமை அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் இரண்டாவது மயக்க மருந்து வைத்தியராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இதையடுத்தே, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடம் இன்று முதல் மீண்டும் தினமும் இயங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.











# இளைஞர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் செயற்றிட்ட கலந்தாய்வு

**(மட்டக்களப்பு)**

சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தால் மட்டக்களப்பில் நடைமுறைப் படுத்தப்படும் இளைஞர்களின் வாழ்வாதார வலுப்படுத்தல் செயற்றிட்டம் பற்றி அரச அரச சார்பற்ற தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது என்று அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் இளைஞர்களுக்கான நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அனுலா அன்டன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலில் அரச, அரச சார்பற்ற சுமார் 15 தொழில் கல்விப் பயிற்சி நிறுவனங்களின் தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி அனுலா மேலும் தெரிவிக்கையில்,

அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் தொழில் வழிகாட்டல் செயற்றிட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் பங்குபற்றுதல், இளைஞர்களை இணைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடலாக இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் இளைஞர்களின் தொழில் கல்வி போட்டித் தன்மை மிக்கதாக, சர்வதேச தராதரங்களுக்கு ஏற்றவையாக, சந்தை நிலவரங்களுக்கு கிராக்கி உள்ளதாக முன்னெடுக்கப்படல் வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டு செயற் றி ட்ட ங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார்.

---




# யாழ். மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா வெள்ளியன்று மாவட்ட செயலகத்தில்

யாழ்ப்பாணம் மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட பண்பாட்டுப் பேரவையும், மாவட்ட செயலகமும், இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் அனுசரணையுடன் நடத்தும் இந்தப் பண்பாட்டுப் பெருவிழா மாவட்ட செயலகத்தில் நாளைமறுதினம் மதியம் ஒரு மணியளவில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக முன்னாள் செயலர் இமல்டா சுகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

பண்பாட்டு ஊர்வலத்துடன் நிகழ்வு ஆரம்பமாகி தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெறும். அத்துடன் “யாழ்ப்பாணம்” நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புதியதோர் ஆலோசனை

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கும் அந்நிய செலாவணி வருமானத்துக்கும் உல்லாசப் பயணத்துறையை அதிகம் நம்பி இருக்கும் இலங்கை, அந்தத் துறையை மேம்படுத்துவதற்கான விடயத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு நிற்கின்றது.

இந்த ஆண்டில் 30 லட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் தருவிக்க இலங்கை திட்டமிட்டு, இலக்கு வைத்துச் செயற்பட்டதாயினும், அந்த எண்ணிக்கை 25 லட்சத்தை தாண்டாது என்று தற்போதைய கணக்கீடுகள் தெரிவிக்கின்றன.

இந்த இலக்கை எட்ட முடியாமல் போனதற்கான முக்கிய காரணமாக உல்லாசப் பயணிகள் நாட்டுக்குள் வந்து செல்வதற்கான பயணப் போக்குவரத்துக்குக் கட்டுநாயக்கா விமான நிலையம் போதுமானது அல்ல என்ற குறைபாடு சுட்டப்படுகின்றது. அது உண்மைதான். உலக நாடுகளில் உள்ள தரம்மிக்க விமான நிலையங்களோடு ஒப்பிடுகையில் பெரும் எண்ணிக்கையில் பயணிகளைக் கையாள்வதில் கட்டுநாயக்கா விமான நிலையம் அதிக நெருக்கடிகளை - இடர்பாடுகளை - எதிர்கொள்கின்றது என்பது உண்மைதான்.

அதே நேரத்தில் உல்லாசப் பயணிகளை வடக்கில் உள்ள பலாலி விமானநிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவை மூலம் வரவேற்பதற்கான வாய்ப்பை - சாத்தியத்தை - இலங்கையின் பௌத்த, சிங்களப் பேரினவாத தலைமைகள் முட்டுக்கட்டை போட்டுத் தடுக்கின்றன.

கட்டுநாயக்கா விமான நிலையத்தை மேலும் விஸ்தீரணப்படுத்தி 'ஏ-350' ரக பாரிய விமானங்களும் வந்திறங்கிப் போகக் கூடியதாக அதன் ஓடுபாதையை அதிகரிக்கச் செய்யும் திட்டம் ஒன்று குறித்து இலங்கையின் விமானப் பயணத் துறையோடு அதிகம் பரிச்சயம் கொண்ட விமானியான கப்டன் எல்மோ ஜெயவர்த்தன என்பவர் வெளியிட்டு இருக்கின்றார்.

தற்போதைய கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு வடக்கே உள்ள விமானப் படைத் தளத்தை அப்படியே இப்போது அதிகம் செயலற்றிருக்கும் மத்தள விமான நிலையத்துக்கு மாற்றி விட்டு, அந்த இடத்தை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துடன் இணைப்பதன் மூலம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் தரத்தையும் வசதிகளையும் விஸ்தீரணத்தையும் மேலும் மேம்படுத்தி, வருடாந்தம் அரைக் கோடி உல்லாசப் பயணிகளை கையாளக் கூடிய நிலைமைக்கு அதனை தர முயர்த்த முடியும் என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்.

நாட்டுக்கு உடனடி பயன்தரக் கூடிய இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விரைந்து இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது முக்கிய விவகாரமாகும்.

ஆனாலும் துணிச்சலான முடிவுகளை எடுக்கவும், ஊழலற்ற முறையில் இத்தகைய திட்டங்களை விரைந்து வழிநடத்தி, நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றத்தை கொண்டு வரவும் கூடிய அரசியல் தலைமை இருந்தால்தான் இத்தகைய திட்டங்கள் வெற்றிகரமாக அமையும்.

இந்த ஆட்சி பீடத்திடம் அது இருக்கின்றதா? தெரியவில்லை...!




# திருமணத்துக்கு முந்தைய ஆலோசனை குறித்து பதிவாளர்களுக்கான விழிப்புணர்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலையில் திருமணத்துக்கு முந்தைய ஆலோசனை குறித்து திருமணப் பதிவாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு நாடு முழுவதும் நடைமுறைப் படுத்தும் திருமண பதிவாளர்களுக்கான முன் திருமண ஆலோசனை வழங்கல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று (30) திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கையில் உள்ள தேசிய மகளிர் ஆணைக்குழுவின் 1938 என்ற எண், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உதவிச் சேவைக்கான முறைப்பாட்டு மையமாகும்.

இந்த முறைப்பாட்டு மையத்துக்குக் கிடைக்கும் முறைப்பாட்டின் அடிப்படையில் அடிப்படையில் குடும்ப சண்டைகள், வன்முறைகள் காரணமாக குறுகிய காலத்திலேயே திருமண முறிவுகள் மற்றும் விவாகரத்து அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. இதனாலேயே சிறப்பான திருமண வாழ்க்கை அமைத்துக்கொள்ள தேவையான ஆலோசனைகள் வழங்கும் நோக்கில் திருமணப் பதிவாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த நிகழ்வின் பிரதான குறிக்கோளாகும்.

இந்த நிகழ்வில் முன் திருமண ஆலோசனையின் அவசியம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து உளவியல் ஆலோசனை உத்தியோகத்தர் எல்.டி. கிருஷாந்த லக்மால் (இலங்கை கடற்படை) விளக்கமளித்தார்.

திருமணத்தின் சட்ட ரீதியான முக்கியத்துவம், வன்முறைகள் மற்றும் விவாகரத்து அதிகரித்தல் குறித்து சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட ஆலோசகர் ஜே.ஜே.எம். தமயந்தி குமாரி தெளிவு படுத்தினார்.

இதேவேளை, நிகழ்வில் கலந்து கொண்டோரின் இரத்த அழுத்தம், நீரிழிவு, உடல் நிறை குறியீடு ஆகியவை கடற்படையின் ஒத்துழைப்புடன் மற்றும் திருகோணமலை மாவட்ட லயன்ஸ் கிளப்பின் அனுசரணையுடன் பரிசோதிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட திருமணப் பதிவாளர்கள், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பட்டணமும் சூழலும், மூதூர், கிண்ணியா, கோமரங்கடவெல மற்றும் மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# திருமலை தனியார் பஸ்களது தர நியமங்கள் பரிசீலனை!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலையில் இருந்து பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார்துறை பஸ்கள் உரிய தர நியமங்களுடன் உள்ளனவா என்பதைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் நேற்று (30) திருகோணமலை தனியார் பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

மோட்டார் வாகன திணைக்களத்தின் மாவட்ட போக்குவரத்து பரிசோதகர் மற்றும் திணைக்கள அதிகாரிகளால் இந்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட, பஸ்களில் காணப்பட்ட குறைபாடுகள், சாரதி மற்றும் நடத்துனருக்கு கூறப்பட்டது. அத்துடன் குறைபாடுகள் 14 நாள்களுக்குள் மாற்றம் செய்யப்படாதவிடத்து குறித்த பஸ்களின் வீதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் எனவும் அதிகாரிகளால் கூறப்பட்டது.

கிழக்கு மாகாண தனியார் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்,தலைமைப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப்பிரிவு பொறுப்பதிகாரி,மாகாண தனியார் துறைப் போக்குவரத்துப்பிரிவின் பிரதான பரிசோதகர் உற்பட பரிசோதகர்கள் ஆகியோர் இந்த பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பெரும் எண்ணிக்கையான தனியார் பஸ்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நாடு முழுவதும் பயணிகள் போக்குவரத்து பஸ்களில் காணப்படும் குறைபாடுகள் கண்டறியப்பட்டு சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய கிழக்கு மாகாணத்தில் இந்த நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டது.

டீசலுடன் மண்ணெண்ணை கலந்து பயன்படுத்தும் பஸ்களைக் கண்டறிந்து சட்ட நடவடிக்கை எடுக்கும் செயற்பாடுகளும் நடைபெற்றன. அத்துடன் பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள அனுமதியற்ற ஹோர்ன்கள், மேலதிக பொருத்துக்களும் முழுமையாக அகற்றப்பட வேண்டும் என அதிகாரிகளால் வலியுறுத்திக் கூறப்பட்டது.

# முன்பள்ளிகளை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம்!

## முன்பள்ளி ஆசிரியர் சம்மேளன தலைவி விக்னேஷ்வரி

(த.சுபேசன்)

இலங்கையில் உள்ள அனைத்து முன்பள்ளிகளும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும் என்று மன்னார் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சம்மேளனத் தலைவி திருமதி வெ.விக்னேஷ்வரி கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற முன்பள்ளி மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் மேம்பாடு தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய நிரந்தர நியமனம் மற்றும் அதனூடாக ஓய்வூதியம் ஆகியன வழங்கப்படுதல் வேண்டும்.

அரச பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற விடுமுறை முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டும்.

அத்துடன் இலங்கையில் உள்ள அனைத்து முன்பள்ளிகளும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு முன்பள்ளிப் பாடத்திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்படல் வேண்டும்.

மிக முக்கியமாக க.பொ.த சாதாரண தர தகுதி இல்லாவிடினும் அதிக சேவைக் காலத்தைக் கொண்ட ஆசிரியர்களை முன்பள்ளி சேவையில் இருந்து நீக்காமல் அவர்களுக்கான மாற்று வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.– என்றார்.

# முறக்கொட்டான்சேனை இராணுவ வளாகம் பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிப்பு

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி இராணுவத்தினருக்குப் பாராட்டு










(மட்டக்களப்பு)

முறக்கொட்டான்சேனை இராணுவ முகாம் அமைந்திருந்த பாடசாலை வளாகம் பாடசாலை நிர்வாகததினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி இதற்கு இராணுவத்தினருக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

முறக்கொட்டான்சேனை இராணுவ முகாம் அமைந்திருந்த இடம் முறக்கொட்டான்சேனை இராமகிருஸ்னமிஷென் பாடசாலைக்கு முழுமையாக உரியமுறையில் கைளிக்கப்பட்டது.

முறக்கொட்டான்சேனை படைமுகாம் அகற்றப்பட்டு 35 ஆண்டுகளுக்குப் பின்னர் அப்பகுதியை மீளளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (30) திங்கட்கிழமை இராணுவ முகாம் வளாகத்தில் உத்தியோகபூர்வமாக இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, இப்பாடசாலையை உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய நிலையில் இராணுவத்தினர் கையளித்தமைக்கு நன்றிகள். மற்றும் பொது மக்களின் தேவைக்காக காணப்படும் காணிகளை நீதி துறையின் அணுகலின் அடிப்படையில் அவற்றையும் விடுவித்து வரப்படுகின்றன.

அந்த வகையில், கிழக்கு மாகாணத்தின், மட்டக்களப்பு மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளில் ஒன்றாக இருந்த வந்த முறக்கொட்டான் சேனை இராமகிருஷ்னா பாடசாலை வளாகத்தில் இயங்கிய குறித்த இராணுவ முகாமானது தற்போது முழுமையாக அகற்றப்பட்டு அப்பகுதி பாடசாலை நிர்வாகத்திடமும் மக்களிடமும் மீள ஒப்படைக்கப்பட்டது என்றார்.

நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் கைத்தொழில்துறை அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான சுனில் ஹந்துன்னெத்தி பிரதம அதிதியாக கலந்து முகாம் இருந்த நிலத்தை விடுவித்தமைக்கான பத்திரத்தை உரியவர்களிடம் கையளித்தார்.



# சமுர்த்தி முகாமையாளருக்கு சேவை நலன் பாராட்டு விழா

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற எம்.சீ.எம்.தஸ்லீமுக்கு, அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவு முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட “பணி நிறைவு பெறும் பணிக்கொரு விழா” எனும் தொனிப்பொருளிலான சேவை நலன் பாராட்டு நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (29) தலைமைபீட சமுர்த்தி முகாமையளர் எம்.ஜே.எம் நிஃமத்துல்லா தலைமையில் அக்கரைப்பற்று “குளோபல் வில்லா பீச்சில்” மிக விமர்சையாக நடைபெற்றது.

இவர், தனது சேவைக்காலத்தில் அக்கரைப்பற்று, பொத்துவில், அட்டாளைச்சேனை, இறக்காமம் போன்ற பிரதேச செயலகங்களில் தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளராக, முகாமைத்துவப் பணிப்பாளராக, வங்கி முகாமையாளராகக் கடமையாற்றி பல்வேறு சமுர்த்தித் திட்டங்கள் ஊ டாக வருமானம் குறைந்த பல சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளுக்கான வசதி வாய்ப்புக் களையும் , வருமானமீட்டுவதற்கான வாழ்வாதார உதவிகளையும் அந்தந்த பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் ஆகியோரின் சிறந்த வழிகாட்டல்களுடன் சக முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் இணைந்து சமுர்த்தி பெருநர்களின் வாழ்வில் ஒளியேற்ற காரணமாக இருந்துள்ளார்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ. எம். எம்.அன்சார், கௌரவ அதிதிகளாக உதவி பிரதேச செலளார் றாஷீத் யஹ்யா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. ஏ. எம்.தமீம், கணக்காளர் ஏ. பீ.அப்துர் ரஹ்மான், கருத்திட்ட முகாமையாளர் என். ரீ. மசூர், சமுர்த்தி வங்கி முகாமையாளர் யூ.கே.எம்.நழீம் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# தலைமுறை தாண்டி பழமை பேசும் பழமொழிகள்!

எம்முடைய பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பல்வேறு அம்சங்களும் இன்று எம்மால் பேசப்படாமலேயே அழிந்துச் செல்கின்றன. அதன் வரிசையில் எமது முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த அனுபவம் மிக்க பழமொழிகள் முதன்மை பெற்றதாக இருக்கின்றது. இவ்வாறு அழிந்து செல்லும் பண்பாட்டுக்குப் புத்துயிர் அளிப்பதாக இந்தப் பழமை பேசும் பழமொழிகளின் தேடல் அமைகின்றது.

எமது முன்னோர்களின் வழி வந்த நீண்ட கால அனுபவத்தின் வெளிப்பாடாகவே பழமொழிகள் காணப் படுகின்றன. பொதுவாக பழமொழி என்பது பழமையான மொழி ஸ்ரீ "பழமொழி" என அர்த்தப்படுத்தப்படுகின்றது. பழமொழிகளானது இயற்கை செழுமை மிக்கததாகவும், மொழித் தேர்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் காணப்படுகின்றன. இவ்வாறான பழமொழிகளுக்கென காணப்படும் சில தனித்துவமான அம்சங்களின் வழியாகவே இன்றும் சில சமூகங்களில் பல்வேறு வகையான அர்த்தங்களை வெளிப்படுத்தும் பல்வேறு பழமொழிகள் எமது மூதாதையர்களின் மூலமாக உயிர் பெற்று நிலைத்திருக்கின்றது,

பொதுவாகப் பழமொழிகள் எனும் போது அவை இசைவான ஒலிக் குறிப்புக்களையும், தேவையற்ற வார்த்தை பிரயோகங்களை தவிர்த்தும் பயன்படுத்தப்பட்டு வருவதால், அன்றாட வாழ்க்கையில் ஏதோ ஒரு சமயத் தில் இந்த பழமொழிகளின் பயன்பாடு எமக்கு தேவையானதாக அமைகின்றது.

எனவே எம்முடைய சமூகத்தில் இன்று உயிர்பெற்று காணப்படும் பழமொழிகளும் அதன் வழியாக வெளிப்படுத்தப்படும் அனுபவமான தத்துவங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாக இருக்கின்றது. அதற்கமைய யாழ்ப்பாணத்தின் நகர்ப்புறங்களில் உள்ள சில சமூகங்களை நோக்கி எனது இந்த கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, அந்த சமூகங்களில் இருந்து வெளிவந்த பழமொழிகளானது சமூகத்துக்குச் சமூகம் வேறுபட்டவையாகவும், அதன் பயன்பாடுகளும் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுத்தப் பட்டவையாகவும் இருந்ததை என்னால் அடையாளம் காணமுடிந்தது.

அது மட்டுமல்லாமல் இந்த பழமொழிகள் வெளிப் படுத்தும் அர்த்தங்களும், அவை சார்ந்த அனுபவங்களும், அதன் பின்புல கதைகளும் எனக்கு இந்த பழமொழிகள் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் கொக்கு விலை சேர்ந்த 70 வயதான மா கமலாதேவி ஓய்வு பெற்ற முன்னால் ஆசிரியர் ஒருவரின் மூலமாக இப்ப பழமொழிகளும் அதற்கான அர்த்தங்களையும் பெற்றுக் கொள்ள முடிந்தது.

" கற்பூர பாத்தி கட்டி உப்புற நட்டு விட்டாலும் அதன் மனம் மாறாது" என்பதற்கு அர்த்தம் கற்பூரத்தால் பாத்தி கட்டி அதில் உப்பை இட்டு பூண்டை போட்டால் அதன் மனம் மாறாது, அதேபோல ஒருவரின் குண மானது எப்போதும் மாறாது என்ற ஒரு அருமையான விளக்கத்தைக் கூறினர்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை" என்ற பழமொழியையும் அதன் அர்த்தம் வீட்டில் மனைவி இருந்தால் இல்லாதது எதுவும் இருக்காது. அதுவே வீட்டில் மனைவி இல்லாவிட்டால் எதுவும் இருந்தும் இல்லாதது போல என பெண்ணியத்தின் பெருமை பேசும் ஒரு பழமொழியையும் அழகான முறையில் கூறினார்.

இவ்வாறு இவர் ஒரு ஆசிரியராக இருந்து சில அனு பவத்துக்குப் புதுமையான பழமொழிகளைக் கூறியி ருந்தாலும், அநேகமான பழமொழிகளை மீண்டும் ஞாபகமூட்டிக் கூறுவது இவருக்கு கடினமாக இருந்தது. என்பதால் இவரிடம் இருந்து அநேகமான பழமொழிகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அவரைத் தொடர்ந்து கோண்டாவிலை சேர்ந்த பரமேஸ்வரி என்ற 68 வயதுடைய முதியவர் ஒருவரை சந்தித்தபோது அவரிடம் இருந்து இவ்வாறான பழமொ ழிகளை பெற்றுக் கொள்ள முடிந்தது.

" ஊறா வீட்டு நெய்யே என் பொண்டாட்டி கையே" என இவர் கூறிய நகைச்சுவையான பழமொழியானது வேறொருவரின் நெய் வேறொருவரின் பொருள் என்றாலும் அதனை தன் கணவருக்கு எனும்போது அதிகளவாக கொடுப்பது என்ற அர்த்தத்தைக் கூறியிருந்தார். மேலும் மனைவி தன் கணவனுக்கு சார்பாக நடந்துக் கொள்ளும் போது இந்தப் பழமொழி களை பயன்படுத்துவதாகவும் கூறினார்.

அடுத்ததாக, "ஊரா பிள்ளை சோட்டை பாய கிளப்பின மூட்டை" என்ற பழமொழி மற்றவர்களின் பிள்ளையானது வயது வந்தால் வீட்டை விட்டு கிளம்பி விடும் என்றவாறு ஒரு அர்த்தத்தினை கூறியிருந்தார். அதாவது பிறருடைய பிள்ளைகளானது அதனுடைய வயது வரும்போது யாராக இருந்தாலும் அந்த வீட்டில் இருந்து சென்றுவிடும் என்ற அர்த்தத்தில் அமைந்திருப்பதாக கூறியிருந்தார்.

இவை தவிர்ந்து,

" உரலில் தலையை வைத்து உலக்கைக்கு பயப்பட லாமா..."?, "சுக்குக்கு மிஞ்சிய வைத்தியம் இல்லை சுப்ரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை" என பல்வேறு அர்த்தங்களை வெளிப்படுத்தும் பல்வேறு பட்ட பழமொழிகளை கூறியிருந்தனர். இந்த பழமொழிகள் எமது வாழ்க்கைக்கு தேவையான அனுப வங்களை கூறும் பழமொழிகளாக அமைய பெற்றி ருந்தமை இதன் சிறப்பம்சமாக இருந்தது.

மேலும் இந்த கள ஆய்வில் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்ட பழமொழிகளின் தொகுப்பாக பெண்ணினத்தை இழிவுபடுத்தும் பழமொழிகள் சமூகத்தில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதாகும், அவை குறித்து பழமொழிகளை தேட முற்பட்டபோது, பெண்களை இழிவுபடுத்தும் பழமொழிகள் பெரும்பாலும் அன்றைய காலகட்டங்களில் பயன்படுத்தப்பட்ட போதும் தற்போது அதனை நினைவூட்டி கூறுவது எமது மூதாதையர்களுக்குச் சிரமமாக அமைந்தது.

அக்கால சமூகத்தில் பெண்களை இழிவுப் படுத்திய ஒரு சில பழமொழிகளை கேட்டு அறிந்து கொள்ள முடிந்தது. அதன் வரிசையில், "உண்டி சிறுத்தல் பெண்டிர்கழகு", "பூவுள்ள மங்கை பொற்கொடி போன இடமெல்லாம் செருப்படி", "பொம்பள சிரிச்ச போச்சு புகையில விரிச்சா போச்சு" கட்டுப்படாத பெண்

தொடர்ச்சி▼

# தலைமுறை தாண்டி பழமை பேசும் பழமொழிகள்!

**தொடர்ச்சி▲**

சொட்டுக்கொண்டு போயிட்டு" இத்தகைய பழமொழிகள் ஆனது சமூகத்தில் ஒரு பெண் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது, என்பதனையும், உடல் ரீதியாகவும் நடத்தை ரீதியாகவும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி கூறுவதாகவும், மேலும் சமூகத்துக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளாத போது அவர்களை தூற்றுவதாக பெண்களை இழிவுபடுத்தும் பழமொழிகள் என சமூகத்தில் பயன்படுத்த பட்டிருக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான பழமொழிகள் பெண்களை இழிவுபடுத்துவதற்காக பயன்படுத்தப்படுவது குறைவாக காணப்படுகின்ற போதிலும் ஒரு சில சமூகங்களில் பெண்களின் நடத்தைகளை நாசுக்காக கூறுவதற்கு இவ்வாறான பழமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, பழமொழிகள் என்பது வெறுமனே வாய் வார்த்தையின் வெளிப்பாடாக அமையாமல் அவை பல்வேறு வகையில், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒருவருடைய நடத்தை, உணர்வு, பண்பாடு கலாச்சாரம், ஒழுக்கம் என பல்வேறுப்பட்ட அம்சங்களை வெளிப்படையாக கூறுவதற்கு பயன்படுத்த பட்டதே பழமொழிகளாக அமைகின்றன.

இத்தகைய பழமொழிகளானது ஆழமான அர்த்தத் தைக் கொண்டு, அளவில் சிறியதாகவும் உலகின் உண்மை தன்மையை எடுத்துக் கூறுவதாகவும், மக்கள் மத்தியில் பிரபல்யமானதாகவும் காணப்படுகின்றது.

இவற்றினை உருவாக்கியவர்கள் யார் என எவராலும் கூற முடியாது. எனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒழுக்க விழுமியங்களை எடுத்து கூறும் இந்த பழமொழி கள் ஒரு தலைமுறையிலிருந்து இனொரு தலைமுறைக்கு அனுபவத்தின் வழியாக வந்த ஒரு அம்சமாகவே காணப்படுகின்றது. இவை காலத்தின் ஓட்டத்தில் பயன் படுத்தப்படுவதும், வெளிப்படுத்தப்படுவதும் குறைந்து செல்கின்றது என்றாலும், இவ்வாறான ஆவணப்படுத் தல்கள், கள ஆய்வுகள் என ஒரு சில செயல்பாடுகள் என்பன இவற்றை எமது அடுத்த தலை முறைக்கு கடத்திச் செல்வதற்கான ஓர் அடித்தளமாக அமைகின்றது என்பதை என்னுடைய இந்த கள ஆய்வு எனக்கு உணர்த்தியது.

எனவேதான் இது என்னை சார்ந்து மட்டுமல்லாமல், எமது சமூகம் சார்ந்தும் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற கட்டாயத்தின் அடிப்படையில் எனது கட்டுரை அமையப்பெறுகின்றது.

**எஸ். அஸ்விதா,**
ஊடகத்துறை மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.

# திருக்கோவில் பிரதேச வீதிகளில் மின்விளக்கு பொருத்தும் நடவடிக்கை





திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வீதிகளில் தெரு மின்விளக்கு பொருத்து தல் மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள மின்விளக்குகளை திருத்துதல் போன்ற நடடிக்கைகளில் திருக்கோவில் பிரதேச சபை மும்மூரமாக ஈடுபட்டு வருகிறது.

திருக்கோவில் பிரதேச மக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் கோரிக் கைகளுக்கு அமைவாக தவிசாளர் எஸ். சசிகுமாரின் வழிகாட்டலில் இந்த நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகி றது.

காஞ்சிரங்குடா, தாண்டியடி உமிரி, கஞ்சிகுடியாறு, தம்பிலுவில் போன்ற பகுதிகளில் முதல் கட்டமாக தெரு மின் விளக்கு பொருத்தும் நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டுள்ளது.

திருக்கோவிலில் உள்ள சகல பிரதே சங்களுக்கும் நேரடிக் கள விஜயம் மேற் கொண்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகளை கேட்டறிந்துவரும் தவிசாளர் சசிகுமார் அவற்றில் மிக முக்கியமான வற்றை நிவர்த்தி செய்து வருகிறார்.

இதேவேளை, மக்களின் போக்கு வரத்துக்கு இடையூராக மிகவும் மோச மான நிலையில் காணப்படும் வீதிகளை செப்பனிடும் பணியும் பிரதேச சபை யினால் முன்னெடுக்கப்பட்டு வருகி றது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# கிழக்குலகின் அதிகார உதயம்...!

வரலாற்றில் 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் மேற்குலக நாடுகள், குறிப்பாகப் பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பானியா பின்னர் அமெரிக்கா ஆகியவை உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முன்னணியில் இருந்தன. ஆனால், 21 ஆம் நூற்றாண்டுக்குள் வந்தபோது, இந்த நிலைமையில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகின் அதிகாரச் சமநிலையானது படிப்படியாக மேற்குலகத்தில் இருந்து கிழக்குலகத்துக்குச் செல்லும் நிலையை காணக் கூடியதாக உள்ளது.

இதில் சீனா முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கிழக்குலகின் அதிகாரத்தின் மையமாக இது திகழ்கிறது. சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக மட்டும் அல்லாமல், உலகளாவிய வர்த்தக மற்றும் முதலீட்டுத் தளமாகவும் உருவெடுத்துள்ளது. Belt and Road Initiative (BRI)மூலம் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றை இணைக்கும் வணிகச் சாலையை உருவாக்கி வருகிறது. தொழில்நுட்ப துறையில் செயற்கை நுண்ணறிவு, 5 ஜி மின்சார வாகன உற்பத்தி போன்ற துறைகளில் சீனா மேற்குலகத்துடன் போட்டியிடுகிறது.

மேலும், தென்கிழக்காசியாவில் அதன் இராணுவப் பங்களிப்பும் உலக அதிகார சமநிலையை மாற்றுகின்றது.

சீனாவை பின்பற்றி இந்தியாவும் கிழக்குலகின் அதிகார பலத்தை தன் கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இதன்படி இந்தியா, சீனா எதிரி நாடுகளாக இருந்தாலும் வர்த்தக ரீதியாக ராஜதந்திர ரீதியாகவும் இரகசிய நண்பர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக மட்டுமின்றி, அதிவேகமாக வளர்ந்து வரும் பொருளாதார மையமாகவும் திகழ்கிறது. தகவல் தொழில்நுட்ப சேவைகள், மருந்து உற்பத்தி, விண்வெளி ஆய்வு அதாவது சந்திரயான், ஆதித்ய-எல்1 திட்டம் போன்ற துறைகளில் இந்தியா உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும், இந்தியாவின் இளம் தொழிலாளர் வலிமை, வர்த்தக சந்தை மற்றும் சர்வதேச கூட்டாண்மைகள் (அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான்,ஆபிரிக்கா) ஆகியவை அதனை உலக அரசியலில் முக்கிய அங்கமாக்குகின்றன.

இந்த இரு நாடுகளையும் இணைக்கும் பாலமாகத் திகழ்வது ரஷ்யா எனும் முந்தைய வல்லரசாகும். 1991 ஆம் ஆண்டு ரஷ்யா சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேறித் தனது பலத்தைக் குறைத்துக் கொண்டாலும் இன்றும் துடிப்புடன் செயற்பட்டு வரும் ஒரு நாடாகவே இருக்கின்றது.

அதன் ஒரே குறிக்கோள் மேற்குலகின் அதிகாரச் சமநிலையை உடைப்பதே ஆகும். ரஷ்யா உலகின் முக்கிய எரிசக்தி உற்பத்தியாளர் நாடாகும். இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் மூலமாக ஐரோப்பிய நாடுகளின் மீது மிகுந்த தாக்கத்தைச் செலுத்துகிறது. இராணுவ வலிமை, அணு ஆயுதங்கள், மற்றும் உக்ரைன் போர் போன்ற அரசியல் நடவடிக்கைகள் மூலம்




ரஷ்யா உலக சமநிலையில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நாடுகளைத் தவிர பல நாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டமைப்பாகவும் செயல்படுகின்றது. இதன் மூலம் மேற்குலகின் அதிகாரச் சமநிலையை பெற்று அது கிழக்குலகின் பக்கம் ஈர்க்கப்பட்டு வருவதைக் காண முடியும்.

அத்தகைய கூட்டமைப்புகளாக பிரிக்ஸ் மற்றும் ஆசியான் போற்ற கூட்டமைப்புகளைக் குறிப்பிடலாம்.

BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா) உலகின் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களை பிரதிபலிக்கும் அமைப்பாக உள்ளது. இவர்கள் மேற்குலக ஆதிக்கத்துக்கு மாற்றாக ஒரு புதிய தளத்தை உருவாக்குகின்றனர்.

ASEAN தென்கிழக்காசியாவின் பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளை ஒருங்கிணைத்து, சீனா மற்றும் இந்தியாவுடன் வலுவான உறவை வளர்க்கிறது.

Shanghai Cooperation Organisation (SCO) பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான கிழக்கு நாடுகளின் வலிமையை வெளிப்படுத்துகிறது.

இந்த மாற்றங்களின் விளைவாக, உலகம் இனி ஒருதுருவ அமைப்பில் இல்லாமல், பல்துருவ அமைப்பாக மாறியுள்ளது. மேற்குலக நாடுகளின் ஆதிக்கம் குறைந்து, கிழக்குலக நாடுகள் உலக வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் தீர்மானிக்கக் கூடிய பங்காற்றுகின்றன. இதன் மூலம் சர்வதேச அரசியலில் புதிய சமநிலை உருவாகிக் கொண்டு வருகின்றது.

**சௌந்தராஜன் துர்ஷாயினி**
மூன்றாம் வருடம்,
ஊடகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# திருமறைக் கலாமன்றம்

## கலைத்தூது அழகியல் கல்லூரி

## சித்திர முத்திரைகள் - IX

(கண்காட்சி)

**காலம்**

03, 04, 05, 06 ஒக்ரோபர் 2025

வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள்

**நேரம்**

காலை 9.00 மணி – மாலை 4.00 மணி

**இடம்**

கலைத்தூது அழகியல் கல்லூரி

128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதம விருந்தினர்

**திரு நாகரத்தினம் ராஜன்**

உதவிக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

ஆரம்ப நிகழ்வு 03.10.2025 வெள்ளிக்கிழமை

காலை 9.30 மணிக்கு இடம்பெறும்

*தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

கலைத்தூது அழகியல் கல்லூரி

128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

# நவராத்திரி ஆன்மீகம் மட்டுமல்ல அறிவியல், உளவியலின் ஒன்றிப்பு!

ஆன்மீகமும் அறிவியலும் உளவியலும் இணைந்த ஒரு மகத்தான விரதமே நவராத்திரி விரதமாகும். இந்துக்கள் அனுஷ்டிக்கும் விரதங்களில் நவராத்திரி விரதம் மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. விரதம் என்பது உணவை விடுத்தேனும் அல்லது சுருக்கியேனும் மனம், வாக்கு ,காயம் ஆகியவற்றால் இறைவனை அன்போடு வழிபடுதல் ஆகும்.

நவராத்திரி விரதம் ஒன்பது இரவுகளும், பத்து பகல்களும் அனுஷ்டிக்கப்படும். பத்தாவது நாள் விஜய தசமி கொண்டாடப்படும். இது வெறும் ஆன்மீக சடங்கு மட்டுமல்ல இதன் பின்னால் ஆழமான அறிவியல் மற்றும் உளவியல் உண்மைகள் புதைந்துள்ளன. துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று பெண் தெய்வங்களையும் வணங்குவதன் மூலம் ஆன்மீகப் பலம் பெறுவதோடு, இந்த விரத முறைகள் உடலையும், மனதையும், ஆன்மாவையும் தூய்மைப்படுத்துகின்றன.

### ஆன்மீக பார்வை

நவராத்திரியின் ஆன்மீக அடித்தளம் சக்தி வழிபாடாகும். 'சக்தி' என்பது பிரபஞ்சத்தின் ஆக்கபூர்வமான ஆற்றலைக் குறிக்கிறது. இந்த ஒன்பது நாள்களும் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி என மூன்று அவதாரங்களை வணங்குகிறோம்.

முதல் மூன்று நாட்களும் துர்க்கையை வழிபடுவர். இந்த நாள்களில் நம் மனதில் உள்ள கோபம், பொறாமை, அகங்காரம் போன்ற எதிர்மறை எண்ணங்களை அழிக்க துர்க்கையை வழிபடுகிறோம். இது நம் ஆன்மாவை சுத்திகரிப்பதற்கான முதல் படியாகும். இது ஒருவகையில் மனத் தூய்மைக்கான செயல்முறை.

அடுத்த மூன்று நாள்களும் லட்சுமியை வழிபடுவர். இந்த நாள்களில் லட்சுமியை வணங்குவதன் மூலம் செல்வம், வளம் மற்றும் செழிப்பை பெறுகிறோம். இங்கு செல்வம் என்பது பணம் மட்டுமல்ல, நல்ல உடல் நலம், நன்னெறி, நற்பண்புகள் போன்ற பல செல்வங்களையும் குறிக்கிறது. இது நமது வாழ்க்கையில் நேர்மறையான ஆற்றலை ஈர்க்க உதவுகிறது.

கடைசி மூன்று நாள்களும் சரஸ்வதியை வழிபடுகிறோம். சரஸ்வதி ஞானம், கல்வி, கலைகளுக்கு அதிபதி. இந்த நாள்களில் அவரை வழிபடுவதன் மூலம் நமது சிந்தனைத் திறன், படைப்பாற்றல், மற்றும் ஆன்மீக ஞானம் மேம்படுகின்றன. இவை நமது அறிவை வளர்த்து, நம்மை நல்ல முடிவுகளை எடுக்கத் தூண்டுகின்றன. இந்த மூன்று நிலைகளும் ஒரு ஆன்மீக வளர்ச்சிப் பயணத்தைக் குறிக்கின்றன. முதலில் தீய குணங்களை அழிப்பது, பிறகு நல்ல குணங்களை வளர்த்துக் கொள்வது, இறுதியாக ஞானத்தைப் பெறுவதை குறிக்கிறது.

### விஞ்ஞான அடிப்படைகள் மற்றும் உடலியல் ரீதியான நன்மைகள்

நவராத்திரி விரதத்துக்கு விஞ்ஞான ரீதியாகவும் வலுவான காரணங்கள் உள்ளன. இந்த விழா பொதுவாக செப்ரெம்பர் – ஒக்ரோபர் மாதங்களில், அதாவது பருவநிலை மாறும் காலங்களில் வருகிறது. இந்த காலகட்டத்தில் நமது நோய் எதிர்ப்பு சக்தி குறையும். எனவே, உடல்நலம் பேணுவதற்கு இந்த விரதமுறை மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. உடல் சுத்திகரிப்பை (Detoxification) ஏற்படுத்துகிறது. நவராத்திரி விரதத்தின் போது அசைவ உணவுகளைத் தவிர்த்து தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள், காய்கறிகள், மற்றும் குறிப்பிட்ட கிழங்கு வகைகளை மட்டுமே உண்பது வழக்கம். இந்த உணவு முறை உடலில் தேங்கியுள்ள நச்சுப் பொருள்களை வெளியேற்றி, செரிமான மண்டலத்துக்கு ஓய்வளிக்கிறது. இதனால் உடல் ஆரோக்கியம் மேம்படுகிறது.

இவ்விரதம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. இந்த நாள்களில் எடுத்துக்கொள்ளப்படும் சத்தான



பழங்கள் மற்றும் காய்கறிகள் உடலுக்குத் தேவையான விட்டமின்கள், தாதுக்கள், மற்றும் ஆண்டி ஒக்ஸிஜன்களை அளிக்கின்றன. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்ளில் இருந்து உடலைப் பாதுகாக்க உதவுகிறது.

நவராத்திரி விரதம் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை தருகிறது. இந்த விரதத்தின்போது மக்கள் அதிகம் எண்ணெய், காரம் இல்லாத எளிமையான உணவை உண்கிறார்கள். இதனால் உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம் போன்ற பிரச்சனைகள் குறைய வாய்ப்புள்ளது. இது உடல் நலத்துக்கு மட்டுமல்ல, மன அமைதிக்கும் உதவுகிறது.

### உளவியல் தாக்கம்

நவராத்திரி விரதத்தின் உளவியல் தாக்கங்கள் மிகவும் ஆழமானவை. இந்த ஒன்பது நாள்களும் ஒருவரின் உடல் மற்றும் மனதின் மீதான கட்டுப்பாட்டை அதிகரிக்கிறது. சுய கட்டுப்பாட்டை (Self-Discipline) ஏற்படுத்துகிறது. விரதத்தின்போது சில உணவுகளைத் தவிர்ப்பது, அதிகாலையில் எழுந்து வழிபாடு செய்வது போன்ற நடைமுறைகள் சுய கட்டுப்பாட்டை வளர்க்கின்றன. இது ஒருவர் தனது ஆசைகளையும், பழக்கவழக்கங்களையும் கட்டுப்படுத்த கற்றுக்கொள்கிறார். இது மன வலிமையை அதிகரிக்கிறது.

மன அமைதியை (Mental Peace) ஏற்படுத்துகிறது. நவராத்திரி காலத்தில் செய்யப்படும் பூஜைகள், மந்திரங்களை உச்சரிதல், தியானம் ஆகியவை மனதுக்கு அமைதியைத் தருகின்றன. மந்திர ஒலிகள் மூளையின் அலைகளை மாற்றி, மன அழுத்தத்தைக் குறைத்து, அமைதியை ஏற்படுத்துகின்றன. இது ஒருவகையில் மன அழுத்தத்துக்கான மருந்தாகச் செயல்படுகிறது.

நேர்மறை சிந்தனையை (Positive Thinking) உருவாக்குகிறது. விரதத்தின் போது தெய்வங்களை வழிபடுவது, பஜனைகள் செய்வது, நல்ல எண்ணங்களை வளர்ப்பது ஆகியவை நேர்மறை சிந்தனையை தூண்டுகின்றன. இது நமது வாழ்க்கையின் மீதான பார்வையை மாற்றி, மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது.

சமூக பிணைப்பை (Social Bonding) உருவாக்குகிறது. நவராத்திரி கொண்டாட்டங்கள் சமூகத்தில் ஒரு பிணைப்பை ஏற்படுத்துகின்றன. குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் சேர்ந்து கொலு வைப்பது, பாடல்கள் பாடுவது, நடனம் ஆடுவது போன்ற செயல்பாடுகள் தனிமையைக் குறைத்து, ஒருவருக்கொருவர் நெருக்கத்தை அதிகரிக்கின்றன. இது உளவியல் ரீதியாக மிகவும் பயனுள்ளது.

நவராத்திரி விரதம் என்பது ஆன்மீகம், அறிவியல், மற்றும் உளவியல் ஆகிய மூன்று அம்சங்களையும் இணைத்து, மனிதனின் உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மைப்படுத்தும் ஒரு மகத்தான விரதமாகும். இது வெறும் சடங்கு அல்ல, அது ஒரு வாழ்க்கை முறை. நாமும் நவராத்திரியில் பங்கு கொண்டு நலன் பல பெறுவோம்.



மு.நிமியா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## கரூர் கூட்ட நெரிசல் விவகாரம்

# உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை; பா.ஜ.க கூட்டணி எம்.பி.க்கள் குழு வலியுறுத்தல்

கரூர் சம்பவம் தொடர்பாக பதவியில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும் என்று பா.ஜ.க கூட்டணி எம்.பி.க்கள் குழு தெரிவித்துள்ளது.

கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்கவும், உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்கவும் பா.ஜ.க. எம்.பி.க்கள் ஹேமமாலினி, அனுராக் தாக்கூர், தேஜஸ்வி சூர்யா மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் என 8 பேர் கொண்ட குழுவை அமைத்து, பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா உத்தரவிட்டார்.



அதன்படி, ஹேமமாலினி தலைமையிலான குழுவினர் நேற்று கரூர் வந்தனர். அவர்கள், வேலுசாமிபுரத்தில் சம்பவ இடத்தை ஆய்வு செய்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினர்.

பின்னர், எம்.பி.க்கள் ஹேமமாலினி, அனுராக் தாக்கூர் ஆகியோர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்தபோது, அவர்கள் கூறுவதைக் கேட்டு தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் அரசியல் கட்சியினர் சரியான இடங்களை தேர்வு செய்யவேண்டும்.

மிகவும் குறுகிய இடத்தில் 30 ஆயிரம் பேர் கூடியுள்ளனர். ஆனால், மாவட்ட நிர்வாகம் என்ன செய்தது? பொலிஸ் என்ன செய்தது? நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்கள் என்ன செய்தார்கள் என பல்வேறு கேள்விகள் எழுகின்றன. மிகக் குறுகிய சாலையில் அனுமதி வழங்கியது தவறு.

விஜய் பேசிக் கொண்டிருந்தபோது காலணி, பாட்டில்கள் வீசியதாகவும், ஜெனரேட்டர் இயங்காமல் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். இதற்கு ஆளுங்கட்சியான தி.மு.க. அரசும், நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தவர்களும் பதில் அளிக்க வேண்டும்.

இந்த சம்பவம் தொடர்பாக, தற்போது பதவியில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும். சுதந்திரமான, நியாயமான முறையில் விசாரணை நடத்தி, உண்மையை வெளிக்கொணர வேண்டும். இந்த சம்பவம் தொடர்பாக நாங்கள் 8 கேள்விகளை எழுப்பி, விசாரணை அதிகாரிகளிடமும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடமும் வழங்க உள்ளோம்.

ஒரு வாரத்துக்குள் பதிலை பெற்று, அதில் உள்ள தகவல்களையும், பாதிக்கப்பட்டோர் தெரிவித்த கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரித்து பா.ஜ.க. தலைமையிடம் வழங்குவோம்.” என்றனர்.

# ஸ்பெயின் கார் பந்தயத்தில் அஜித் அணி மூன்றாமிடம்



நடிகர் அஜித் குமார் கார் பந்தயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

‘அஜித் குமார் ரேஸிங்’ என்ற தனது அணியின் மூலம் டுபாய், பெல்ஜியம் உள்ளிட்ட பல நாடுகளில் இடம்பெறும் முக்கிய கார் பந்தயங்களில் அவர் பங்கேற்றுவருகிறார்.

இதில் அவரது அணி டுபாயில் 2ஆவது இடத்தையும், இத்தாலியில் மற்றும் பெல்ஜியத்தில் 3ஆவது இடத்தையும் தன்வசப் படுத்தியது.

இந்தநிலையில் ஸ்பெயினில் இடம்பெற்ற 24 எச் சீரிஸ் கார் பந்தயத்தில் அஜித் குமார் ரேஸிங் அணி 3 ஆவது இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளது.

தொடர்ந்து அடுத்தடுத்த பந்தயங்களில் சாதித்து வரும் அஜித் குமார் ரேஸிங் அணி, இந்தியாவுக்குப் பெருமை சேர்ப்பதாகப் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

# நடிகை ஊர்வசி ரவுதேலாவிடம் அமுலாக்கத்துறை விசாரணை

சட்டவிரோத சூதாட்ட செயலி வழக்கில் நடிகை ஊர்வசி ரவுதேலாவிடம் அமுலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று விசாரணை நடத்தினர்.



இந்தியாவில் சூதாட்ட செயலிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இந்நிலையில், சட்டவிரோதமாக செயல்பட்டு வரும் சூதாட்ட செயலிகள் ஏராளமான முதலீட்டாளர்களின் கோடிக் கணக்கான பணத்தை மோசடி செய்ததுடன் கோடிக் கணக்கில் வரி ஏய்ப்பு செய்கின்றனர் என புகார் எழுந்துள்ளது.

நடிகர்கள், கிரிக்கெட் வீரர்கள் உள்ளிட்ட பிரபலங்கள் இத்தகைய செயலிகளை மறைமுகமாக ஊக்குவித்ததாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக அமுலாக்கத் துறை வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அமுலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த மாதம் சோதனை நடத்தினர். மேலும் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷிகர் தவண் மற்றும் சுரேஷ் ரெய்னாவிடம் விசாரணை நடத்தினர்.

மேலும் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் யுவராஜ் சிங், ராபின் உத்தப்பா மற்றும் இந்தி நடிகர் சோனு சூட் உள்ளிட்டோரிடமும் சமீபத்தில் விசாரணை நடத்தினர்.

இந்த வழக்கு தொடர்பாக அமுலாக்கத் துறை அதிகாரிகள் நடிகை ஊர்வசி ரவுதேலாவுக்கும் அழைப்பாணை அனுப்பி இருந்தனர். இதன்படி, அவர் டில்லியில் உள்ள அமலாக்கத் துறை தலைமை அலுவலகத்தில் நேற்று ஆஜராகி விளக்கம் அளித்தார்.



# பிலிப்பைன்ஸில் பாரிய நிலநடுக்கம் 60 பேர் உயிரிழப்பு; 200 பேர் காயம்

மத்திய பிலிப்பைன்ஸில் 6.9 மெக்னிடியூட் அளவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 60 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டின் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சுமார் 200 பேர் வரை காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று உள்ளூர் நேரப்படி இரவு 10 மணியளவில் செபு நகரின் கடலோரப் பகுதியில் இந்த நிலநடுக்கம் தாக்கியது.

நிலநடுக்கத்தால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் கட்டடங்களும் சேதமடைந்தன.

செபு நகரம், போகோ நகரம் மற்றும் பிற பாதிக்கப்பட்ட நகரங்களில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

விசயாஸ் பிராந்தியத்தில் அமைந்துள்ள செபு நகரின் மக்கள் தொகை சுமார் 1 மில்லியனாகும்.

இதற்கிடையில், பிலிப்பைன்ஸ் எரிமலை மற்றும் நில அதிர்வு நிறுவனம் முன்னர் விடுக்கப்பட்ட ஆழிப்பேரலை எச்சரிக்கையை ரத்து செய்துள்ளது.

சிறு கடல் மட்ட தளம்பல்களால் ஏற்படக்கூடிய எந்தவொரு பாதிப்புகளும் பெரும்பாலும் கடந்துவிட்டனஎன்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.









# நேபாளத்தில் வாழும் தெய்வமாக 2 வயது சிறுமி தேர்வானார்

நேபாளத்தில் வாழும் தெய்வமாக ஆர்யதாரா ஷக்யா என்ற 2 வயது சிறுமி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் தலேஜு பவானி திருக்கோயிலில் பருவ மடையாத சிறுமிகள் வழிபாட்டுத் தெய்வ மாகப் போற்றும் முறை நடைமுறையில் உள்ளது.

இந்தநிலையில் இதுவரை காலமும் குமாரி த்ரிஷ்ணா ஷக்யா என்று அழைக்கப்படும் சிறுமியை, வாழும் தெய்வமாகப் போற்றி வந்தனர்.

பருவமடைந்தவுடன் குமாரி ஒரு சாதா ரண மனிதராகக் கருதப்படுவார் என்பது மரபு. ஓய்வுபெறும் குமாரிகளுக்கு அரசு மாத ஓய்வூதியம் வழங்கும்.

குராமரியாக இருந்து ஓய்வுபெற்ற பெண்களை திருமணம் செய்பவர் விரைவில் இறந்துவிடுவார் என்ற நம் பிக்கை இருப்பதால் பல முன்னாள் குமாரிகள் திருமணம் செய்துகொள்ளாம லேயே வாழ்வர்.

அந்த வகையில், 2017 இல் தேர்வான குமாரி த்ரிஷ்ணா ஷக்யாவுக்கு தற்போது 11 வயது பூர்த்தியாகியுள்ளதால் அவர் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதன்படி, நேபாளத்தின் புதிய வாழும் தெய்வமாக ஆர்யதாரா ஷக்யா என்ற சிறுமி தேர்வு செய்யப்பட்டார்.

இதற்கமைய அவர் பல்லக்கில் சுமந்து செல்லப்பட்டு, மன்னர் அரண்மனையில் தங்க வைக்கப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆர்யதாரா சாக்யாவின் தந்தை, தனது மனைவி கர்ப்பமாக இருந்த போது தெய்வமாக கனவு கண்டதாகவும், தனது மகள் சிறப்புமிக்கவராக இருப்பார் என்று நம்பியதாகவும் கூறியுள்ளார்.







கனடா முரசு

பக்கங்கள் - 03

புதன்கிழமை 01/10/2025

## இஸ்ரேல் - ஹமாஸ் சமரசம்; கனடா முழுமையான ஆதரவு



C2 ▶



# கனடிய நகராட்சித் இடைத் தேர்தலில் ஈழத் தமிழர் நீதன் சண்முகராஜா வெற்றி

கனடாவில் நகராட்சியொன்றின் உறுப்புரிமைக்காக நடைபெற்ற இடைத்தேர்தலில் ஈழத் தமிழர் ஒருவர் வெற்றியீட்டியுள்ளார்.

கனடாவின் ஸ்காப்ரோ ரக்ரிவர் தொகுதியில் நடைபெற்ற நகராட்சி இடைத்தேர்தலில் நீதன் ஷான் என்று அழைக்கப்படும் நீதன் சண்முகராஜா வெற்றியீட்டியுள்ளார். இந்த தொகுதி றொடொரண்டோ மாநகராட்சியின் ஓர் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

நீதன் சண்முகராஜா 5174 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார் என்பதுடன் அவரை எதிர்த்து போட்டியிட்ட அனு சிறிஸ்கந்தராஜா 3374 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தாம் கடந்த காலங்களில் வழங்கிய சேவையையும் தமது அயராத உழைப்பினையும் மக்கள் அங்கீகரித்துள்ளனர் என நீதன் சண்முகராஜா தெரிவித்துள்ளார்.

C2 ▶

# வெளிநாட்டு பணியாளர்களுக்கு விசா சலுகைகள் வழங்கப்படும்

## கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவிப்பு



வெளிநாட்டு பணியாளர்களை ஈர்க்கும் வகையில் விசா சலுகைகள் வழங்கப்படும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

“அமெரிக்காவில் அதிகமான எச்-1பி விசா வைத்திருப்பவர்களுக்கு இனி விசா நீடிப்பு கிடைக்காது. இவர்கள் திறமையானவர்கள்.

அவர்களுக்கு கனடாவில் ஒரு வாய்ப்பு வழங்கி பயன்படுத்தி கொள்வோம். விரைவில் இது குறித்து ஒரு விசா சலுகையை வழங்குவோம்.

அந்த பணியாளர்களில் பலர் தொழில்நுட்பத் துறையில் உள்ளனர். மேலும் அவர்கள் கனடாவில் வேலைக்கு வர தயாராக உள்ளனர்.

கனடா அரசாங்கம் இந்த வகையான திறமைகளை உள்வாங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது குறித்து தெளிவான விசா சலுகைகள் விரைவில் அறிவிக்கப்படும் ” என்று மார்க் கார்னி கூறினார்.

கனடா பிரதமர் கார்னி அறிவிப்பின்படி விசா சலுகை அளிக்கப்பட்டால் அமெரிக்காவின் எச்-1பி விசா கட்டண உயர்வால் பாதிக்கப்படுபவர்களுக்கு நிவாரணமாக இருக்கும்.

இந்நிலையில் வெளிநாட்டு ஊழியர்களை கட்டுப்படுத்த விசா விதிகளை அமெரிக்கா கடுமையாக்கி வரும் நிலையில், சீனா புதிய விசா நடைமுறையை அறிவித்துள்ளது.

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் சார்ந்த துறைகளில் உலக அளவில் உள்ள சிறந்த ஊழியர்களை ஈர்க்கும் நோக்கில் கே விசாவை அறிமுகம் செய்துள்ளது. இது வருகிற 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வர வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

C2 ▶



# இஸ்ரேல் – ஹமாஸ் சமரசம்; கனடா முழுமையான ஆதரவு

இஸ்ரேல் – ஹமாஸ் போருக்குத் தீர்வு காண அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் முன்வைத்த புதிய அமைதி திட்டத்துக்கு தனது அரசு முழு ஆதரவு தரும் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரலாற்றுச் சிறப்புமிக்க மத்திய கிழக்கு அமைதி திட்டத்தை கனடா வரவேற்கிறது.

இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுவதற்கு அனைத்து தரப்பினரும் பங்காற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

முக்கிய அடுத்த படியாக ஹமாஸ் உடனடியாக அனைத்து பணயக் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். மேலும் காசா பகுதியில் தடை இல்லாத, பெருமளவிலான மனிதாபிமான உதவிகளை வழங்க கனடா தயாராக உள்ளது எனவும் மார்க் கார்னி கூறினார்.

அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்ட 20 அம்ச அமைதி திட்டத்திற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆதரவு தெரிவித்துள்ளார்.

அதில், ஹமாஸ் ஆயுதம் கைவிடுதல் மற்றும் பிடியிலிருக்கும் அனைவரையும் விடுவித்தல், அதற்கு பதிலாக பாலஸ்தீனர்களுக்கு மனிதாபிமான உதவி வழங்குதல் மற்றும் போருக்கு முற்றுப்புள்ளி வைப்பது என்பன அடங்கியுள்ளன.

ஆனால், காசா பகுதியில் தனித்த பாலஸ்தீன ஆட்சி உருவாகும் உத்தரவாதம் இத்திட்டத்தில் இடம்பெறவில்லை.

இதேவேளை, கனடா கடந்த வாரம் ஐ.நா. பொதுச் சபைக்கான முன்னோட்டமாக பாலஸ்தீன் நாட்டை அதிகாரபூர்வமாக அங்கீகரித்ததைத் தொடர்ந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

---

### கனடிய நகராட்சி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி தொகுதியில் ஜெனிபர் மெக்கல்வி நகராட்சி மன்ற உறுப்பினராக கடமையாற்றி வந்தார்.

எனினும் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிட்டு வெற்றி ஈட்டிய காரணத்தினால் அந்த நகராட்சி மன்ற உறுப்புரிமை பதவி வெற்றிடமானது.

அதற்காக நடைபெற்ற இடைத் தேர்தலில் நீதன் சண்முகராஜா வெற்றியீட்டியுள்ளார். எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையில் அவர் இந்த நகராட்சி மன்ற உறுப்பினர் பதவியை வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

46 வயதான நீதன் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டவர் என்பதுடன் டொரண்டோ பல்கலைக்கழகத்தில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### வெளிநாட்டு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை அமெரிக்காவில் வெளிநாட்டு பணியாளர்களுக்கு வழங்கப்படும் எச்-1பி விசா விண்ணப்ப கட்டணத்தை 1 இலட்சம் டொலர்களாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உயர்த்தி அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்கார்பரோ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் மரணம்





டொரொண்டோவில் ஸ்கார்பரோ பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 20 வயது மதிக்கத் தக்க இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மார்க்கம் வீதி மற்றும் கூகர் கே-ார்ட் சந்திப்பில் மோட்டார் சைக்கிள் மற்றும் எஸ்.யு.வீ வாகனம் மோதியதாக டொரொண்டோ பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

விபத்தில் கடுமையாக காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் விசாரணைகள் தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






# ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியாகும் சில சீஸ் வகைகளுக்கு கனடாவில் தடை

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில சீஸ் வகைகளுக்கு கனடாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதி பண்டிகைக் காலத்தில் கனடாவின் கடைகளில் சில பிரபல சீஸ் வகைகள் கிடைக்காமல் போக உள்ளன.

ஐரோப்பிய மாடுகளில் பரவியுள்ள லம்பி ஸ்கின் நோய்த் தொற்று காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ், இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்திலிருந்து பதப்படுத்தப்படாத பாலைக் கொண்டு தயாரிக்கப்படும் சீஸ் இறக்குமதியை கனடாவின் உணவுப் பரிசோதனை அமைப்பு தடை செய்துள்ளது.

இந்த தடை 2025 மே 23 இற்கு பிறகு தயாரிக்கப்பட்ட அனைத்து சீஸ் உற்பத்திகளுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சில பிரபல்யமான சீஸ் வகைகள் கிடைப்பதில் தடைகள் ஏற்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.